ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

குறள் முழக்கம்



திருவள்ளுவர் ஆண்டு-2057 சித்திரை- 30 பொ.ஆ.2026- மே-13

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் வெளியிடும் இலவச இணையத் திங்களிதழ்



பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி (05.02.1942 - 13.05.2026) தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர், செம்மொழித் தமிழாய்வு நிறுவன மேனாள் துணைத்தலைவர்

புகழ்வணக்க மலர்



தமிழியக்கத்தின் மேலாண்மைக்குழு உறுப்பினர்,தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர்,செம்மொழி தமிழாய்வு நிறுவன மேனாள் துணைத்தலைவர், தமிழறிஞர் இ.சுந்தரமூர்த்தி (13/5/26) இயற்கை எய்தினார்.

படம்-தமிழியக்கத் தலைவர்,கல்விவேந்தர் கோ.விசுவநாதன் அவர்கள் புகழ்வணக்கம் செலுத்தும் காட்சி-.கருஞ்சட்டையில் திரு.சுகுமாரன் (எ)நற்குமரன்,மாநிலச்செயலாளர், தமிழியக்கம்.

‘குறள்நெறி’ சிறப்பாசிரியர் குழுவில் இணைந்து சிறப்புச் சேர்த்த பெருந்தகை; சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வுத்துறை நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனார் ஐம்பதாம் நினைவாண்டுக் கருத்தரங்கத்தில் பங்கேற்றுச் சிறப்புரை வழங்கிய சீர்மையை நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

செந்தமிழ்ச் சுந்தரர்;
செம்மையின் மூர்த்தி;
நட்பின் இலக்கணம்;
புலமையின் நிலைக்களன்;
பண்பின் நிறைகுடம்
அன்பின் உறைவிடம்;
கல்விப் பேரொளி;
சொல்வலை வேட்டுவர்;
பன்னூல் ஆயிரம்
செந்நா அசைந்தால்
செவிகள் நிறைத்திடும்;
சென்னை தஞ்சைக்
கலைக் கழகங்களில்
தாயன்புடனே
தழைத்திடச் செய்த
மாணவ விழுதுகள்
ஆயிரம் தாங்கிய
ஆலமரம் எனில்
சாலவும் பொருந்துமே!
பதவி இவரால்
பெருமை பெற்றதும்
படிப்பு இவரால்
புதுமை யுற்றதும்
உலகோர் அறிந்து
உவகை உற்றனர்;
இவரை மற்றொரு
'தமிழ்த் தென்றல்'
என்றே நவிலலாம்!
ஆனால் இந்த
அன்புத் தென்றல்
குறளுக்கொரு
தடையெனக்
கேள்விப்பட்டதும்
சூறாவளியெனச்
சீறியெழுந்ததும்
மாறன் அவையின்
கீரனோ என
மயங்கி நின்றோம்!

திருக்குறளுக்குத்
தடையெனச் சொன்ன
வெறுப்புறு இதழின்
வீண்வாதத்தைத்
தவிடுபொடியாய்த்
தகர்க்கும் அறிவுரை
தக்காங்கு மொழிந்தார்
குவிமைய அரங்கிலே!
அப்போது தொடங்கிய
திருக்குறள் இணையக்
கல்விக் கழகத்தின்
வழிகாட்டியாகவும்
குறள்நெறி இதழின்
சிறப்பாசிரியரெனவும்
விருப்புடன் விளங்கிய
வீறார் புலவர்;
இத்தகு புரட்சிப்
போக்கினைக் கொண்ட
செந்நாப் புலவரைக்
காப்பியம் பாடிக்
கருத்தில் நிறுத்திடக்
கற்றேன் அல்லேன்;
அன்பருள் ஒருவராய்
அவர்புகழ் பாடும்
அடியேன் இன்று
அடைந்த அவலமோ
கடலினும் பெரிதே!
அலைப்புறும் படகெனக்
கலங்கி நின்றேனே!
மறைமலை இலக்குவனார்



திருவள்ளுவர் மட்டுமின்றிச் சேக்கிழார்,கம்பர் முதலான புலவர்மன்றங்களுக்கும் உ.வே.சா.நூல்நிலையத்துக்கும் தமது உழைப்பை நல்கியவர்.என்.சி.பி.எச்.புத்தக வெளியீட்டு நிறுவனத்துக்கும் சென்னைப் பல்கலைக்கழகத்துக்கும் புத்தகப்பதிப்பில் முனைந்து உழைத்தவர்.எத்தகைய வேறுபாடும் கருதாது எல்லாத் தரப்பினருடனும்,இயக்கத்தினருடனும் தமிழால் உறவு பாராட்டியவர்.

அமிழ்தத்தமிழ் ஆய்வுமன்றத்தின் சார்பாக புலவர்மணி இரா.இளங்குமரனார் நூல்வெளியீட்டுவிழாவில்-------

இ-வ:)(இளவரச அமிழ்தன், முனைவர் இ.சுந்தரமூர்த்தி, புலவர்மணி இளங்குமரனார், மறைமலை இலக்குவனார், மருத்துவர் அறிவழகி சிரீதரன், இளங்குமரனார் பெயர்த்தி முத்தரசி இ.கா.ப.

வள்ளுவம் போற்றும் உறவுகளுக்கு பேரிழப்பு😢**வள்ளுவர் குரல் சி.இராசேந்திரன் அவர்கள்**

பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, இன்று 13 - 05 - 2026 புதன்கிழமை அதி காலை 4-45 A.M. இறையருளில் இணைத்தார்

16 ,"தென்றல்",பாரதியார் தெரு,திருமலைநகர் விரிவாக்கம்,பெருங்குடி,சென்னை -600096.

16, Bharathi Street,Thirumalai nagar annexe , Perungudi Chennaiநாளைக் காலை 14/5/2026, 1000 மணியளவில் இறுதி ஊர்வலம் நடைபெறும்.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் (2001-2004) ,சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர். செம்மொழி ஆய்வு நிறுவனம் துணைத் தலைவர் என பல பொறுப்புகளில் திறம்பட செயலாற்றி பெருமை சேர்த்தவர்.

தமிழக அரசின் திருவள்ளுவர் விருது, செம்மொழி விருது, சென்னை பதிப்பாளர் சங்கத்தின் கலைஞர் விருது, கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது உள்ளிட்ட எண்ணற்ற விருதுகளைப் பெற்றவர். திருக்குறள் அணிநலம், பரிமேலழகர் உரைத் திறன்,வான்மறை வள்ளுவம், திருக்குறள் நடையியல், திருக்குறள் பதிப்பு வரலாறு, திருக்குறள் வாழ்க்கை விளக்கம் உள்ளிட்ட பல குறள் குறித்த ஆய்வு நூல்களைத் தந்தவர்; ஏறக்குறைய 110 சிறந்த படைப்புகளை தமிழருக்கு அளித்த பெருமைக்குரியவர்.

இவை அனைத்தும் கோவை வெள்ளலூரில் இந்தியாவில் வெள்ளையனே வெளியேறு போராட்டம் துவங்கிய 1942இல் இளையபெருமாள் பழனியம்மாள் இணையருக்குப் பிறந்த பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் சிறப்புகள்தான். இவை எல்லாம் அவர் கற்றதும் பெற்றதும். இவற்றையும் விஞ்சி திற்கும் ஒரு சிறப்பு அவரிடமுண்டு,தாம் கற்றதை தமிழகுக்கு தங்கு தடையின்றி ரோ வேகத்தில் ஆழமும் விரிவும் கொண்ட எழுத்தும் பேச்சுமாக வழங்கி வந்ததே அச்சிறப்பாகும்.

பெங்களூர்த் தமிழ்ச்சங்கத்தில் 19.01.2013 அன்று காலை கருத்தரங்கம் நடைபெற்றது...படத்தில் (இடமிருந்து) - திரு. சிலம்பொலிச் செல்லப்பனார், தமிழ்ப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் திரு.சுந்தரமூர்த்தி,, முனைவர் இ. மறைமலைஆகியோர்... ஏற்பாடு - அமிழ்தத் தமிழ்ச்சங்கம், பெங்களூர்த் தமிழ்ச்சங்கம்.

இ. சுந்தர மூர்த்தி

சிக்கெடுக்கும்   புன்னகையின் கிடங்குக் காரர்
செந்தமிழ்சீர்ச் தந்திருக்கும் புதையல் காரர்
விக்கலிலாச் சிந்தனையின் வெளிச்ச வேரர்
விழுமழைபோல் சொல்விருந்தின் பந்திக் காரர்
எக்கறைக்கும் இடங்கொடாத செயலின் தீரர்
என்றைக்கும் செந்தமிழ்த்தாய்க் களத்து வீரர்!
தொக்கலிலா நெஞ்சகத்தின் இருப்பி டத்தைத்
தொட்டவுடன்   எழும் இ. சு. பேனாக் காரர்!

தொண்டராக   வந்துழைக்கும் தலைமைத் தோழர்!
தோண்டாத சுனையருவிப்   பொங்கல் ஆறு!
வண்டுறையும் மலர்வனத்தின் நெஞ்சக் கூறு
வரலாறாய் நிறைந்துவரும் தமிழின் பேறு!
கண்டுவக்கும் பேர்க்கெல்லாம் ஊன்று கோலாய்க்
கைகொடுத்தே உதவுகின்ற இனிமை ஈரம்
கொண்டவர் யார் எனக் கேட்டேன்! தமிழ்ச்ச பைகள்
கொண்டுவந்து நிறுத்தியதோ இ. சு. வைத்தான்!

பல்கலையின் துணைவேந்தர்! பந்தா இல்லை!
பார்புகழ்ச்செம் மொழித் தலைவர்! செருக்கே இல்லை!
கல்விக்க டலானாலும்   பொங்கல் இல்லை!
கரைகண்ட தமிழறிஞர்! கலங்கல் இல்லை !
சொல்வித்தைக் காட்டாத எளிமைப் பேச்சில்
சொக்கவைக்கும் மந்திரத்தின் உச்சி எல்லை!
எல்லாமே யாரென்றேன்? ஊரே கூடி
உச்சரித்த ஒற்றைப்பேர்   இ. சு கேட்டேன்!

பேரமைதி குடியிருக்கும் முகச்சி றப்பு!
பேசுகின்ற இதழ்மொழியில் தேன்சு ரப்பு!
கூரிருக்கும் விழியிரண்டில் வான்சி றப்பு!
கொள்கையிலே பிறர்க்குதவும் கோன்இ ருப்பு!

வேரிருப்பை வெளிக்காட்டாப் பூச்சி ரிப்பில்
வெற்றிகளின் பாடிவீட்டுக் குடியிருப்பு!
ஆரிவரோ   எனக் கேட்டேன்! அகம கிழ்ந்து
ஆசையுடன் காட்டினார்கள்! இ. சு. கண்டேன்!

தமிழ்வாழ   இனிநூறு வாழ்வா ரென்றும்
தமிழ்ச்சரிதம் இவர்பெயரைத் தாங்கும் என்றும்
அமிழ்தத்த மிழாய்வரங்கில் உமிழ்நீர் போல
அரங்கத்தில் சுவைகூட்டி ஆள்வார் என்றும்
இமிழ்கடலின் வான்பரப்பின் பன்ம டங்காய்
இவர்புகழின் பரப்பளவு   விரியு மென்றும்
தமிழ்த்தொண்டின் பெருந்தமனியை வாழ்த்தி னேனே!
துரைவசந்த ராச வாழ்த்துப் பொய்த்த   தையோ!

"தமிழுக்குத் தொண்டுசெய்வோர் சாவ தில்லை!
தமிழ்த்தொண்டர் பாரதிதான் செத்த துண்டா?"
அமிழ்தெங்கள் பாவேந்தன்   ஒற்றைச் சொல்லும்
அநாதியாய்ப் போவதில்லை! தமிழ்வி டாது!
இமிழ்கடலின் தொடரலைபோல் இ. சு. தொண்டால்
இவ்வுலகு உள்ளவரை   வாழ்ந்தி ருக்க
அமிழ்தெங்கள் தமிழிவரை மடியில் ஏந்தி
அரவணைக்கும் காலமெலாம் இவர்வாழ் கின்றார்!

கன்றுகளுக்கு மடிகொடுத்த தாய்மை உள்ளம்!
கடுஞ்சொற்கள் அறியாத   பேச்சு வெல்லம்!
குன்றுவிளக் காயிருந்து இளையோர் தம்மின்
குறையிருளைப் போக்கிவந்த கரைவி ளக்கம்!
இன்றில்லை ஆனாலும் என்றும் உண்டு!
இருந்தமிழால் காலமெலாம் வாழ்வார் என்றும்!
சென்றவிடம் எதுவெனினும் தமிழ்ப ரப்பிச்
செயித்திருப்பார்! போய்வரட்டும்! என்றும் வாழ்வார்!

----துரைவசந்தராசன்

நம்பமுடியவில்லை..-------- வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

தமிழறிஞர் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி(84) - [துணை வேந்தர்] 13 - 05 - 2026 புதன்கிழமை அதி காலை 4-45 A.M. இறையருளில் இணைந்தார்.

இளையோரின் அறம் சார்ந்த தமிழ்ப்பணிகளை தொடர்ந்து ஊக்கப்படுத்துபவர்.

நான் எப்போதும் அறிவாளிகள், அறிவுத் தெளிவு உடையவர்களை, நற்சிந்தனை உடைய பெரியவர்களை,

அறச்சிந்தனையாளர்களை, அறிஞர்களை பெரும் மதிப்போடு நட்பில் சூழ்ந்திருக்க விரும்புவேன். அந்த வகையில் என் மேல் வயது வேறுபாடு பார்க்காமல் பேரன்பு கொண்டவர் ஐயா. அவரை சில நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன்.. நிறைய பேசுவோம். நம். தமிழின் வளர்ச்சி, சில மனிதர்களை, வரலாறு குறித்து

பேசினால் பல்வேறு அரிய தகவல்களை ஆதாரத்துடன் கூறுவார்.

ஐயாவிடம் பேசினால் நேரம் போவதே தெரியாது. எதை மனதில் நிறுத்துவது, எதை குறித்துக்கொள்வது என்று தெரியாது. நடமாடும் ஒரு பல்கலைக்கழகமாக பல ஆயிரம் நூல்களைக் கற்ற, பல்வேறு உயர் பொறுப்புகளை வகித்த, ஆழ்ந்த அனுபவம் கொண்ட , நல்ல நினைவாற்றல் கொண்ட , எளிமையும், அறசிந்தனையும் கொண்டவர்.

தமிழ்ச் சமூகத்தின் பேராளுமையை இழந்துவிட்டோம்..

பல்வேறு நிகழ்ச்சிகளை, தமிழ் முயற்சிகளை நானும் , திரு.சி.இராஜேந்திரன் IRS(ஓய்வு) அவர்களும் ஐயாவை வைத்தே தொடங்கியுள்ளோம்.

பார்த்தசாரதி என்னையும் அம்மாவையும் ஒருநாள் உங்கள் வீட்டுக்கு அழைத்து செல்லுங்கள் , சி.ரா குடும்பத்தையும் கூப்பிடுங்கள் பேசிக்கொண்டிருப்போம் என்று அன்புடன் கூறுவார். முடியாமல் போய்விட்டது, எங்கள் புது இல்லத்திற்கு அழைத்து ஆசி பெறவில்லை என்பது பெரும் வருத்தம்..

நேற்றிரவு மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் திரு.ஸ்டாலின் குணசேகரன் அவர்கள் அழைத்து ஐயா சுந்தரமூர்த்தி அவர்கள் தொலைபேசி எண்ணை கொடுங்கள் என்றார். NCBH ன் 75 ஆவது ஆண்டு தொடங்குகிறது , ஐயா ஆலோசகராக இருந்தவர் , அவரிடம் ஒரு வாழ்த்து செய்தி வாங்கவேண்டும் என்றார். பேசிவிட்டு நாளை தொடர்பு எண் பகிர்கிறேன் என்றேன்..இப்படி ஆகிவிட்டது.

.உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் திரு.பாலகிருஷ்ணன் IAS அவர்கள் தலைமையில் நடந்த "அறிஞர்கள் அவையம்" நிகழ்ச்சியில் ஐயாவுக்கு அடுத்து நான் பேசுவதாக இருந்தது. உங்கள் உரையை கேட்டுவிட்டு செல்கிறேன் என்று அன்புடன் கூறினார்.

அதிகம் கற்றவர்கள், பழுத்த பழமான அனுபவம் கொண்டவர்கள், வாழ்க்கையின் எல்லா உயரங்களையும் பார்த்தவர்கள். எல்லா மேடைகளையும் பார்த்தவர்கள், அதிக நூல்களை வாசித்தவர்கள்,, அதிக நூல்களை எழுதியவர்கள், அதிக ஆய்வுகளை செய்தவர்கள், பல முதல்வர்களுடன் , அரசியல் கட்டமைப்புகளுடன் பணியாற்றியவர்கள் எப்படி இருப்பார்கள் என்று ஐயாவை பார்த்து தெரிந்துகொள்ளலாம்

.உங்கள் எண்ணங்கள் எங்களை ஆட்கொண்டுள்ளது.. யாத்திரையை முடித்து வந்த நோக்கத்தை நிறைவேற்றி புறப்பட்டுவிட்டீர்கள் .

சென்று வாருங்கள் ஐயா. நம் நட்பு என்றும் எனக்கு பெருமிததையும்,வழிகாட்டியாகவும் இருக்கும்.

வலைத்தமிழ் ச.பார்த்தசாரதி

கும்பகோணம் ஜம்புலிங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்கள் இயற்கை எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தேன். மிகவும் நிதானமான பேச்சு, நல்ல நிர்வாகம், ஆற்றொழுக்கான உரையாற்றல், பணியாளர்களுடன் கரிசனமாகப் பழகும் மாண்பு என்ற பல நிலைகளிலும் அவருடைய குணங்கள் போற்றத்தக்கதாகும்.

என்னுடைய "படியாக்கம்" (தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், சென்னை, 2004) நூலுக்கு அணிந்துரை கேட்பதற்காகச் சென்றபோது என் எழுத்துப்பணியை வியந்து பாராட்டி ஊக்கம் தந்தவர். அவருடைய அந்த எழுத்து நான் மென்மேலும் எழுத உதவி செய்தது.அவருடைய மேடைப்பேச்சுகளை ஆர்வமாகக் கேட்டதுண்டு. எந்தப் பொருண்மையானாலும் செறிவாக, தொய்வின்றி உரையாற்றுவார். தலைப்பையொட்டியே அவர் பேசும் விதம் சிறப்பாக இருக்கும்.

விக்கிப்பீடியாவில் பதிவதற்காக அவரைப் புகைப்படம் எடுப்பதற்காகப் பெருங்குடி இல்லத்திற்கு 13.3.2022 அன்று சென்றபோது என்னுடைய தொடர் ஆய்வினையும் எழுத்துகளையும் பாராட்டி, பௌத்த நூலின் அச்சுப்பணியை விரைவில் நிறைவேற்றும்படியும் அறிவுரை கூறினார். அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரா.இ.கி.இராமசாமி குடும்பத்தார்

பேராசிரியர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி தமிழறிஞர்.நிறைமொழி மாந்தர். நிறைகுடம். ஆற்றல் சார் ஆராய்ச்சியாளர். கொங்கு நாட்டுக் குணாளர். கோவை மாவட்ட வெள்ளலூரில் எளிய குடும்பத்தில் பிறந்து உழைப்பால் உயர்ந்த உத்தமர்.விருதனைத்தும் வென்றவர். துணைவேந்தர் பதவியில் இருந்த போதும் அதனைத் துறந்த போதும் அதே சிரித்த முகம் கொண்டவர்.

ஆன்மிகத்தில் ஆழ்ந்த நோக்கும் அதேசமயம் அறிவியல் பார்வையும் மிக்கவர். 'இசு எழுபது'

மலர் அவருடைய வரலாற்றைச் சொல்லும் ஆவணம்.வெள்ளலூர் அகழாய்வில் கிடைத்த கிரேக்கம் மற்றும் உரோமானிய நாணயங்கள் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தி இருப்பதைப் பெருமையுடன் குறிப்பிடுவார்.

அவர் மறைவு தமிழ் இமயத்தின் சரிவு.

_பேரா.இ.கி.இராமசாமி குடும்பத்தார்

இளவரச அமிழ்தன்

தமிழ்ச் சான்றோர் பேராசிரியர் இ சுந்தரமூர்த்தி இன்று அதிகாலை இறையடி சேர்ந்தார் ....

ஆய்வரங்கத்தின் அறிவுரைஞராக, இலக்கியத்தில் பன்நூல் ஆசிரியராக

சிறந்த இலக்கிய சொற்பொழிவாளராக

மனிதர்களைப் போற்றும் மாண்புடையவனாக

வாழ்ந்து மறைந்த தகசால் பெரியோனை

நீங்காப் புகழோடு .....நினைவை போற்றுவோம்

இளவரச அமிழ்தன்

அமிழ்தத்தமிழ் ஆய்வரங்கம்

ரங்கையா முருகன்

கண்களை குளமாக்கிய முன்னாள் பல்கலை வேந்தர் இ.சுந்தரமூர்த்தி அவர்களது நெகிழ வைத்த வாழ்த்துரைநேற்று அண்ணா நூலகத்தில் சாகித்ய அகாதமியும் உ.வே.சா.நூலகம் இணைந்து நடத்திய வ.உ.சி.பதிப்பு பணிகள் குறித்த கருத்தரங்கில் வாழ்த்துரை வழங்கிய முன்னாள் துணை வேந்தர் இ.சுந்தரமூர்த்தி ஐயா அவர்களது உணர்ச்சிமிகு நா தழுதழுத்த உரை அனைவரையும் நெகிழ வைத்துவிட்டது.எந்தமாதிரி சூழலில் பெரியவர் வ.உ.சி. தனது துயரத்தை மறக்க தமிழ் பதிப்பு பக்கம் திரும்பலானார் . தனது வறுமையின் சூழலில் தொல்காப்பிய பதிப்பை கொண்டு வந்த வேளையில் அரிசி வாங்க கூட ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் சிரமப்பட்ட நிலையில் பதிப்பு பணிகள் மேற்கொண்டவர். தனது மகள் திருமணத்துக்கு அதிக வரதட்சணை கொடுக்க வழியில்லாமல் பட்ட இடர்ப்பாடுகளையும் கூறி ஒரு நிமிடம் நா தழுதழுக்க உணர்வுமயமாகி நிதானித்து கண்கள் கலங்கி பேச்சைத் தொடர்ந்து பெரியவர் எழுதிய துயரமான வெண்பாவை எப்படி இதை நான் எப்படி சொல்வதென என்று கூறிவிட்டு வந்த கவிஞர்க்கெல்லாம் மாரி போல் பல்பொருள் வழங்கிய சிதம்பரம் மன தாழ்ந்தின்று சந்தமில் வெண்பா சொல்லி பிச்சைக்காக பாரெல்லாம் ஓடுகின்றான் நாச்சொல்லும் தோலும் நலிந்து என்ற துயரமிகு வரிகளை வாசிக்க முடியாமல் கலங்கிய குரலுடன் தொண்டை கம்மி விட்டது அவருக்கு.

தொடக்க விழா முடிந்த வேளையில் ஐயா அருகாமை சென்று என்னங்க ஐயா இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு விட்டீர்கள் என்று நான் உரையாடிய வேளையில் வேதியன்பிள்ளைக்கு வ.உ.சி. எழுதிய கடிதம் கண்டு கண்கள் கலங்கி இரவு முழுவதும் தூக்கம் வராமல் தவித்து வந்ததையும் ஐயா இ.சுந்தரமூர்த்தி அவர்கள் பகிர்ந்து கொண்டார்.

பெரியவர் வ.உ.சி. வரலாற்றை ஒருவர் முழுமையாக உள்வாங்கினால் கல் மனமும் வெண்ணெய் போல உருகி விடும் என்ற நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை அவர்கள் வ.உ.சி.யை பற்றி எழுதிய கவிதை வரி நினைவுக்கு வந்தது.

உ.வே.சா. நூலகம் தொடர்ந்து பதிப்பு பணிகள் குறித்த கருத்தரங்கு நடத்தி வந்த வேளையில் வ.உ.சி. பதிப்பு பணிகள் குறித்து நடத்தியதில் குறிப்பாக இ.சுந்தரமூர்த்தி ஐயாவுக்கு மிக்க குறிப்பிட்டத்தக்க பங்கிருக்கிறது. அவருக்கு மிக்க நன்றி

சென்னைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வுத்துறை நடத்திய பேராசிரியர் சி.இலக்குவனார் ஐம்பதாம் நினைவாண்டுக் கருத்தரங்கத்தில் புலவர் பா.வீரமணி பொன்னாடை போர்த்துகிறார்.பேராசிரியர் திருமதி.வாணி அறிவாளன்,பேராசிரியர் ய.மணிகண்டன்,மருத்துவர் மு.குமரேசன்,சென்னைப்பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பொற்கோ, மறைமலை இலக்குவனார் ஆகியோருடன்

பேராசிரியர் இ.சு.அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை நல்கிய வலையரங்கம்--செய்தி

13/12/20 அன்று “ திருக்குறளுக்குத் தடையா‘ என்னும் தலைப்பில் திருக்குறள் பரப்புரைச் செயலாக்கக் குழு நடத்தும் வலையரங்கம்

வரவேற்புரை: முனைவர் தமிழியலன்

நோக்கவுரை:முனைவர் மறைமலை இலக்குவனார்

தொடக்கவுரை: முனைவர் பொன்.கோதண்டராமன்(பொற்கோ),முன்னைத்துணைவேந்தர்,சென்னைப் பல்கலைக்கழகம்

முனைவர் அன்பு செயா,மருந்துக்குழுமத்தின் மேனாள் மேலாண் இயக்குநர்,இலக்கிய அமைப்புகளின் பொறுப்பாளர், நூலாசிரியர்,சிட்னி,ஆத்திரேலியா

பொறியாளர் ச.இராசேந்திரன்,கணினி வல்லுநர்,தலைவர்,அயர்லாந்து தமிழ்க் கல்விக் கழகம்,டப்ளின்

மருத்துவர் விஜய் ஜானகிராமன்,இதயநோயியலாளர்,ஆர்வார்டு தமிழியல் இருக்கை அமைப்பாளர்

பொறியாளர் பி.பிரபாகரன்தொழில்முனைவோர்,திருக்குறள் பரப்புநர்,அமெரிக்கா.

திருவள்ளுவர் விருதாளர் முனைவர் இ.சுந்தரமூர்த்தி, மேனாள் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம்.

திருவள்ளுவர் விருதாளர் முனைவர் கோ.பெரியண்ணன்

திருவள்ளுவர் விருதாளர் முனைவர் திரு.அன்வர் பாட்சா

கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோ,ஆசிரியர்,“மக்கள் மனம்“ திங்களிதழ்,சிங்கப்பூர்

முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்,மேனாள்பதிவாளர்,தஞ்சைத் தமிழ்ப்பல்கலைகழகம்

திருமதி.தாமரை சீனிவாசராவ்,நிறுவனர்-பொருளாளர்,ஆங்கோர் தமிழ்ச் சங்கம்,கம்போடியா.

பேராசிரியர் மன்னர் மன்னன், பேராசிரியர் (பணிநிறைவு), மலாயாப் பல்லைக்கழகம்,கோலாலம்பூர் சட்டத்துறை வல்லுநர் மாறன் நந்தன், சட்டத்துறைப் பேராசிரியர்,கோலாலம்பூர்,மலேசியா.

பாவேந்தர் விருதாளர் பாவலர் கண்மதியன்,சென்னை.

நிறைவுரை:மூத்த தமிழறிஞர் கண.சிற்சபேசன்

நன்றியுரை: பாவலர் ந.முத்துநிலவன்